# NAMATHU EELANADU E-PAPER-October-2020



# ?????????? ????????????????? ??.??.???. ???????????? ???? ??????? ???????????



புத்தளம் மாவட்டத்தில் உள்ள கல்பிட்டி மருத்துவமனைக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்வதற்காக வந்த 32 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது.

கல்பிட்டியில் வசிக்கும் குறித்த நபர் பேலியகொடா மீன் சந்தைக்கு மீன் கொண்டு செல்லும் லொரி சாரதியின் உதவியாளராக பணியாற்றியதாக அறியமுடிகின்றது.

இறந்தவர் கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டாரா இல்லையா என்பதை அறிய சுகாதார அதிகாரிகள் பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

# ????????? ????????? ?????? ??????? ?????? ???????



நாட்டில் கொரோனா தொற்று நோய் அகன்று போக யாழ் மறைமாவட்ட ஆயர் தலைமையில் விசேட ஆராதனை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் – திருகோணமலை – மன்னார் – மட்டக்களப்பு ஆகிய நான்கு தமிழ் மறைமாவட்டங்கள் அடங்கிய வட கிழக்கு ஆயர் மன்றத்தினரால் நாட்டில் கொறோனா தொற்று நோய் அகன்று போக இன்றைய தினம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பூஜை ஆராதனைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் மரியன்னை தேவாலய சிற்றாலயத்தில் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசத்தின் பங்கு பற்றுதலோடு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் யாழ்ப்பாணம் மரியன்னை சிற்றாலயத்தில் இடம் பெற்ற விசேட பூசை ஆராதனையின் போது நாட்டில் கொரோனா தொற்று நீங்குவதற்கு பிரார்த்தித்ததோடு தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன் வேண்டியும் ஆயர் தலைமையில் விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. குறித்த விசேட பூசையில் யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த குருமார்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்



---

# ????.??????? ????????? ????????? ?????? ???????????? ????????




யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவ கிளினிக் அனைத்தும் இனிவரும் நாட்களில் புதிய இடத்தில் இயங்கும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்

எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து யாழ் போதனா வைத்தியசாலையில் நடைபெறும் மருத்துவக் கிளினிக்அனைத்தும் விக்டோரியா வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் புதிய கட்டடத் தொகுதியில் நடைபெறும்.

ஏனைய கிளினிக்குகள் அனைத்தும் பழைய இடங்களிலேயே இயங்கும்.

மருத்துவ கிளினிக்குக்கு வரும் பொதுமக்கள் நேரடியாக விக்டோரியா வீதியினூடாக வைத்தியசாலைக்கு எதிர்ப்புறமாக இருக்கின்ற கட்டிட தொகுதியில் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்

- 